இனிமையான குழந்தைகளே! நீங்கள் படிப்பின் மூலம் இராஜ்யத்தைப் பெற வேண்டும். இந்தப் படிப்பு உங்களை இரட்டைக் கிரீடம் அணிந்தவராக ஆக்குவது. நீங்கள் உங்களுக்காக உங்கள் இராஜ்யத்தை ஸ்தாபனை செய்கிறீர்கள்.

கேள்வி: எந்தக் காரியம் ஒரு தந்தையினுடையது, அதற்காக மனிதர்கள் அதிகமாக முயற்சியோ செய்கின்றனர், ஆனால் செய்ய முடிவதில்லை?

பதில்: அமைதியற்ற உலகத்தை அமைதி நிறைந்ததாக ஆக்குவது என்ற காரியம் ஒரு தந்தை யினுடையது. மனிதர்கள் முயற்சி செய்கின்றனர், அனைவரும் சேர்ந்து ஒன்றாகி விட வேண்டும், முழு உலகிலும் அமைதி நிலவ வேண்டும். ஓரிருவருக்கு அமைதிப் பரிசும் தருகின்றனர். ஆனால் எப்போது உலகத்தில் இராமராஜ்யம் இருந்ததோ அப்போது அமைதி இருந்தது, இப்போது இராவண இராஜ்யம். இங்கே அமைதி இருக்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஓம் சாந்தி. பரலௌகிகத் தந்தை அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளார் என்பது குழந்தைகளின் மனதில் வந்துவிட்டது - எங்கே அழைத்துச் செல்வார்? சாந்திதாமத்திற்கு. பிறகு என்ன நடக்கும்? யார் நல்ல படியாகப் படித்திருக்கிறார்களோ, அவர்கள் சுகதாமத்திற்கு வருவார்கள். முக்தி தாமத்தின் வழியாக இங்கே வர வேண்டும். எல்லையற்ற தந்தை சுகம் கொடுப்பதற்காக வந்துள்ளார் என்பதை ஆத்மா புரிந்து கொண்டுள்ளது. நாள் முழுவதும் இது நினைவில் இருக்க முடியும். யாருக்கு நிச்சயம் இல்லையோ, அவர்கள் இங்கே வர முடியாது. நீங்கள் ஈஸ்வரியக் குழந்தைகள். பாபாவும் புரிந்து கொண்டுள்ளார், நான் குழந்தைகளுக்கு முன்பாக வந்துள்ளேன் என்று. நிச்சயமாக கல்பத்திற்கு முன்னாலும் கூட தூய்மையற்ற கீழ்தரமான உலகத்தில் வந்திருக் கிறார். இங்கே அனைவரும் மிகத் தாழ்ந்தவர்கள். அங்கே இருப்பவர்கள் அனைவரும் உயர்ந்தவர் கள். அங்கே இராஜா-ராணி எப்படியோ அப்படியே பிரஜைகளும் இருந்தனர். இது ஈஸ்வரிய சம்பிரதாயம் மற்றும் அசுர சம்பிரதாயத்திற்கு இடையிலான விளையாட்டாகும்.

பாடல் : யார் இந்த விளையாட்டை எல்லாம் உருவாக்கியது....... ?

ஏதேனும் பாடல் ஒலிக்கும் போது மனதில் வர வேண்டும், பாபா நம்மை மிக உயர்ந்தவர்களாக ஆக்கியிருக்கிறார். உயர்ந்தவரிலும் உயர்ந்தவராகிய பாபா நிச்சயமாக உயர்ந்தவராகத் தான் ஆக்குவார். அத்தகைய தந்தைக்கு மிகுந்த மகிமைகள் உள்ளன. யாராவது ஏதேனும் (நல்ல காரியம்) செய்தால் அவர்களுக்கு மகிமை உள்ளது. இவர் இன்ன தொழிலில் மிகத் திறமையானவர், இன்ன மனிதர் மிகவும் புத்திசா- என்பது போன்று ஒவ்வொருவரிடமும் நற்குணம் உள்ளது. பரமபிதா பரமாத்மாவுக்கு உள்ள மகிமை அனைவரைக் காட்டிலும் பெரியது. ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர் பாகம் கிடைத்துள்ளது. பரமபிதா பரமாத்மாவுக்கும் கூட பெரியதிலும் பெரிய பார்ட் கிடைத்துள்ளது. இந்த டிராமாவில் பெரிய-பெரிய முக்கிய பார்ட்தாரி யார்? யுதிஷ்டிரர்,

திருதராஷ்டிரர் என்ற இரண்டு சகோதரர்களைக் காட்டுகின்றனர். பிறகு அந்தப் பக்கம் பெரிய-பெரிய பீஷ்ம பிதாமகர் போன்றவர் களைக் காட்டுகின்றனர். பீஷ்ம பிதாமகர் என்றால் பால பிரம்மச்சாரி. துரோணாச்சாரியார், அஸ்வத்தாமா - இதெல்லாம் வித்வான்கள், பண்டிதர்களின் பெயர்கள். இப்போது வித்வான்கள் யுத்த மைதானத்தில் யுத்தம் செய்வார்கள் என்று கூறப் பட்டுள்ளது. அது போல் சட்டம் கிடையாது. பொய்யான மாயா, பொய்யான உடல்,........ இராவணன் பொய்யையும், இராமர் சத்தியத்தையும் சொல்கின்றனர். பரமபிதா பரமாத்மா தான் சத்தியமானவர் எனச் சொல்லப் படுகின்றார். கடவுள் சத்தியமானவர். கடவுள் ஒருவர் தான். மற்றப்படி படைப்பவர் மற்றும் படைப்பினைப் பற்றி அவர்கள் புரிய வைப்பதெல்லாம் பொய். இவை அனைத்தும் ஞானத்தின் விஷயங்கள். ஞானத்தில் உண்மை எது, பொய் எது என்பதையெல்லாம் பாபா வந்து புரிய வைக்கிறார். பாரதத்தின் கீதா ஞானமோ மறைந்து விட்டுள்ளது. மற்றப்படி ஆட்டாவில் உப்பு இருப்பது போல் கொஞ்சம் அடையாளங்கள் உள்ளன. பாபா சொல்கிறார், நான் வந்து குழந்தை களுக்கு வேதங்கள், சாஸ்திரங்களின் சாரத்தைப் புரிய வைக்கிறேன். கீதா முக்கியமானதாகும். அதில் தான் பகவான் வாக்கு என்று உள்ளது. பாபா சொல்கிறார், நீங்கள் கிருஷ்ண பகவான் பெயரை எழுதியிருக்கிறீர்கள். ஆனால் பாபா வந்து புரிய வைக்கிறார், யாரை நீங்கள் பகவான் எனச் சொல்கிறீர்களோ, அவர் சத்யுகத்தின் முதல் இளவரசர் ஆவார். அவர் முதல்-முதலில் என்னிடம் இருந்து விடை பெற்று முக்திதாமத்திலிருந்து வந்திருந்தார்-சத்யுகத்தின் இளவரசராக ஆவதற் காக. நல்லது, ஸ்ரீ கிருஷ்ணருக்கு இவ்வளவு மகிமை உள்ளது என்றால் அவருக்குத் தந்தை கூட இருப்பார் இல்லையா? தந்தை எப்படியோ, அப்படியே குழந்தையும். கிருஷ்ணரின் தந்தையின் மகிமை எங்கே சென்றது? அவர் யாரிடமிருந்து ஆஸ்தி பெற்றார்? ஸ்ரீகிருஷ்ணர் சத்யுக ஆரம்பத் தில் வருபவர். சுயம்வரத்திற்குப் பிறகு லட்சுமி- நாராயணராக ஆகியுள்ளனர். எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தனர்!

இவ்வளவு செல்வம் இவர்களிடம் எங்கிருந்து வந்தது? இச்சமயமோ எதுவும் கிடையாது. என்ன வாயிற்று? இவ்வளவு சாதனங்கள், பொருட்கள் எங்கிருந்து எப்படிக் கிடைத்தது? யார் கொடுத் தார்கள்? குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், எல்லையற்ற தந்தை ஞானம் கற்பித்திருக்கிறார். இந்த ஞானத்தினால் நிச்சயமாக நீங்கள் சத்யுகத்தின் இராஜா ஆகப் போகிறவர்கள். அல்ப காலத்திற்கு இராஜா ஆகின்ற அவர்கள் ஒன்றும் ஞானத்தினால் ஆகவில்லை. யார் அதிக தான-புண்ணியம் செய்கின்றனரோ, அவர்கள் செல்வந்தர் வீட்டில் ஜென்மம் எடுக்கின்றனர். இங்கே நீங்கள் ஞானத்தினால் இராஜா, மகாராஜா ஆகிறீர்கள். அதுவும் இரட்டைக் கிரீடமணிந்த மகாராஜா ஆகிறீர்கள். ஆகவே சொல்கிறார்கள், அனைத்தையும் செய்து விட்டுத் தம்மை மறைத்துக் கொண்டார். குழந்தைகள் நீங்கள் அறிந்து கொண்டிருக்கிறீர்கள், பாபா இராஜ்யம் கொடுத்திருந்தார். மிகவும் சுகமாக இருந்தனர். தேவதைகளின் பூஜை எவ்வளவு நன்றாக உள்ளது! பார்ப்பதானால் ஸ்ரீநாத் கோவிலுக்குச் செல்லுங்கள். தேவதைகளின் ஜடச்சித்திரங்கள் மீது அவ்வளவு விலை யுயர்ந்த அலங்காரப் பொருள்களைப் போடுகின்றனர் என்றால் தாங்களே எஜமானர்களாக இருந்த போது உணவு-பானம் என்ன தான் இருக்காது! புது உலகம் இல்லையா? புதிய வயல் நல்ல விளை பொருள் தரும். பழையதாக ஆவதால் சக்தி குறைந்து விடுகின்றது. குழந்தைகள் நீங்கள் சாட்சாத் காரம் பார்த்திருக்கிறீர்கள். பாபா

புரிய வைக்கிறார், அப்படி இருந்தீர்கள் இல்லையா, பிறகு என்ன வாயிற்று? உங்கள் மீது 5 விகாரங்கள் என்ற மாயா வந்து தொற்றிக் கொண்டு விட்டது. நீங்கள் முள்ளாகி விட்டீர்கள். மூங்கில் மரம் உள்ளது இல்லையா? அதில் முள் நிறைய இருக்கும். அது முள் நிறைந்த காடு எனச் சொல்லப்படுகின்றது. இச்சமயம் ஒவ்வொரு மனிதரும் முள்ளாக இருக்கின்றனர். காமக் கட்டாரி செலுத்திக் கொண்டுள்ளனர். மாயா தொற்றிக் கொண்டதால் இராவண இராஜ்யம் ஆகி விட்டது. நீங்கள் குப்த வே˜த்தில் இருக்கிறீர்கள். யாருக்கும் இது தெரியாது.

குழந்தைகள் நீங்கள் இப்போது கல்பத்திற்கு முன் போலவே ஸ்ரீமத் படி நடந்து கொண்டிருக்கிறீர்கள். வெறும் கல்பத்திற்கு முன் போல் அல்ல, அநேக கல்ப-கல்பத்தைப் போல் நீங்கள் அமர்ந்து பாபா விடம் இராஜ யோகம் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அஹிம்சாவாதிகள். நீங்கள் பிறரால் அறிந்து கொள்ளப்பபடாதவர்கள். தன்னை அறிந்து கொண்டு விட்டீர்கள். உலகமோ அறிந்து கொள்ளவில்லை- இந்த சக்திகள் குப்த ரீதியில் யோக பலத்தின் மூலம் உலகின் மீது தங்களின் தெய்விக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டுள்ளன என்பதை. நீங்கள் ஒவ்வொருவரும் தங்களின் இராஜ்யத்தை அடைவதற்காகப் புரு˜ô ர்த்தம் செய்கிறீர்கள். அந்த சிப்பாய்கள் இராஜ்யத் திற்காகச் (நாட்டிற்காக) சண்டையிடுகின்றனர். ஆனால் நீங்கள் தங்களுக்காக அனைத்தும் செய்கிறீர்கள். பாரதத்தையே தங்க யுகமாக மாற்றுகிறீர்கள். யார்-யார் அவ்வாறு ஆக்குகிறார் களோ, அவர்கள் தான் வந்து பிறகு இராஜ்யம் செய்வார்கள். அதாவது நீங்கள் பாரதத்திற்கு மறைமுக சேவை செய்கிறீர்கள். யார் செய்கிறார்களோ, அவர்கள் பலனை அடைவார்கள். யார் முயற்சி செய்து இராஜா-ராணி அல்லது பிரஜை ஆகிறார்களோ, அவர்கள் தான் வருவார்கள். பாரதத்தில் தான் வந்து இராஜ்யம் செய்வார்கள். இங்கே உங்களின் சிவசக்தி பாண்டவ சேனை உள்ளது. பாண்டவர் என்ற சொல் பண்டாவிலிருந்து வந்தது. பாபா வந்து புரிய வைத்துள்ளார்-முக்கிய ஆன்மிகப் பண்டா (வழிகாட்டி) நான் தான். பாண்டவர்களில் ஆண்களும் உள்ளனர், பெண்களும் உள்ளனர். இல்லற மார்க்கம் அல்லவா? மற்றப்படி சண்டையினுடைய வி˜யமோ எதுவும் கிடையாது. சாஸ்திரங்களிலோ என்னவெல்லாம் எழுதி விட்டுள்ளனர்! எத்தனைப் பெயர் களைக் காட்டி யுள்ளனர்! பாபா அமர்ந்து புரிய வைக்கிறார்-இவையனைத்தும் டிராமாவில் விதிக்கப்பட்டுள்ளன. பக்தியினால் பகவான் கிடைப்பார் எனச் சொல்கின்றனர். பக்தியின் பலனை அளிப்பது என்றால் சத்கதி அளிப்பது. பிறகு சத்யுகத்தில் பக்தி இருப்பதில்லை. சந்நியாச தர்மத்திற்கோ மிகக் குறைவான சமயம் தான் இருந்தது. சொர்க்கத்தில் இவர்கள் வர முடியாது. இப்போது நீங்கள் அறிவீர்கள், சொர்க்கத்தில் யாருடைய ஆட்சி இருந்தது, எந்த தர்மம் இருந்தது என்று. பாபா வந்து தேவி-தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்கிறார் என்றால் மற்ற தர்மங் களின் விநாசம் ஏற்படுகின்றது. நீங்கள் ஈஸ்வரிய சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அசுர சம்பிரதாயத்தினர். இது தூய்மை இல்லாத உலகம் தான். இப்போது நாங்கள் ஈஸ்வரனின் குழந்தைகள் என நீங்கள் சொல்வீர்கள். ஈஸ்வரன் யார்? அவர் நிராகார் சிவன் தானே தவிர பிரம்மம் (வசிப்பிடம்) அல்ல. பிரம்மம் தான் ஈஸ்வரன் என மக்கள் நினைக்கின்றனர். இப்போது பிரம்மத்தை பரமபிதா பரமாத்மா என நீங்கள் சொல்ல மாட்டீர்கள். தன்னையே ஈஸ்வரன் எனச் சொல்லிக் கொள்கின்றனர். பிரம்ம ஞானி எனப் பெயர் வைத்துக்

கொண்டுள்ளனர். எந்த ஓர் அர்த்தமும் இல்லை. பிரம்மம் என்பது மகதத்துவம், அங்கே ஆத்மாக்கள் நாம் விசிக்கிறோம். சாலிகிராம் என்றும் சொல்கின்றனர். ருத்ர ஞான யக்ஞத்தைப் படைக்கின்றனர் என்றால் பரமபிதா பரமாத்மா வின் பெரிய சிவலிங்கத்தையும் சின்னச் சின்ன சாலிகிராம்களையும் உருவாக்குகின்றனர். ஆனால் அது போல் இல்லை-பரமாத்மா பெரிய உருவமாகவும் ஆத்மாக்கள் சிறிய உருவமாகவும். இருப்பது இல்லை, அவர் பரமபிதா பரமாத்மா, சுப்ரீம் ஸோல் (மிக மேலான ஆத்மா), பரந்தாமத்தில் இருக்கும் ஆத்மா எனச் சொல்லப் படுகிறார். ஆத்மா, உடல் உறுப்புகள் மூலமாக நினைவு செய்கிறது. இப்போது இந்த அனைத்து வி^யங்களையும் நீங்கள் அறிவீர்கள். படைப்பவர் மற்றும் படைப்பின் முதல் இடை கடை மற்றும் முக்கிய நடிகர் யார்? எப்படி பார்ட்டை நடிக்கின்றனர்? யார் எத்தனை ஜென்மங்களை எடுக்கின்றனர்? ஆக, இது கணக்காகிறது இல்லையா? ஆனால் இவற்றிற்குள்ளும் செல்ல வேண்டிய தேவை இல்லை. பாபா சொல்கிறார், குழந்தைகளே, இது உங்களுடைய தர்மத்தின் ஜென்மம். 84 ஜென்மம் என்பதோ சரி தான். இது தர்மத்தின் கல்யாண்காரி ஜென்மம். இப்போது நமக்கு நன்மை ஏற்படப் போகிறது. அதனால் இது கல்யாண்காரி ஜென்மம் மற்றும் கல்யாண்காரி (சங்கம) யுகம் என்று சொல்லப் படுகின்றது. இந்த சங்கமயுகத்தைப் பற்றி யாருக்கும் தெரியாது. சங்கமத்தை யுகந்தோறும் எனச் சொல்லியுள்ளனர் என்றால் 4 சங்கமங்கள் வைத்துள்ளனர். பாபா சொல்கிறார், அப்படி இல்லை, இவர்களோ இறங்கும் கலையில் உள்ளவர் கள். சத்யுகத்திலிருந்து திரேதா வருமானால் இரண்டு கலைகள் குறைந்து போகும். பிறகு துவாபர யுகத்திலிருந்து மேலும் கலைகள் குறைந்து போகும். தூய்மை இழந்து கொண்டே செல்கின்றனர். இது பலவித தர்மங்களின் மரம். எத்தனை மொழிகள்! எவ்வளவு அசாந்தி! இப்போது குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், சொர்க்கத்தில் அசாந்தி இருக்காது. இங்கே அநேகருக்கு அமைதிக்கான பரிசு கிடைக்கிறது. அமைதியோ இங்கே கிடையாது. அனைவரும் ஒன்றாக ஒற்றுமையாகி விட வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். போப்பும் கூட சொல்கிறார், அனைவரும் ஒன்றாக வேண்டும் என்று. அனைவரும் சகோதரர்கள் ஆனால் தங்களுக்குள் ஏன் இணக்கமாக இல்லை? அவர்களுக்கு டிராமாவைப் பற்றித் தெரியாது. இராமராஜ்யம் இருந்த போது அமைதி இருந்தது. இப்போது இராவண இராஜ்யம் தர்மங்கள். இப்போது இந்த அமைதியற்ற நிலையை மாற்றி அமைதி நிறைந்ததாக ஆக்குவது ஒரு தந்தையின் காரியமாகத் தான் இருக்கும் இல்லையா? இதுவோ உலகத்தின் கேள்வி இல்லையா? உலகத்தின் தந்தைக்கு அந்த அக்கறை இருக்கும் இல்லையா? பாபா சொல்கிறார், நான் தான் உலகத்தை அமைதிக்குக் கொண்டு செல்கிறேன். பாரதத்தில் அமைதி இருந்தது இல்லையா? அமைதியற்ற ஆத்மாக்களை மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன். உலகத்தின் அமைதிக்காக உலகத்தின் இறைத் தந்தை வர வேண்டியுள்ளது. அவருக்குத் தான் இந்த பாகம் உள்ளது. ஆக, அவர் சொல்கிறார், அனைத்தையும் செய்து......... அனைவருக்கும் சுகம் சாந்தியைக் கொடுத்து விட்டுப் பிறகு மறைந்து கொள்கிறேன். பிறகு சத்யுக-திரேதாவிலும் கூட யாரும் அறிவதில்லை, துவாபர- கலியுகத்திலும் கூட யாருக்கும் தெரியாது. அந்தளவு மறைவாக இருப்பேன் எது வரை தாமே வந்து தமது அறிமுகத்தைக் கொடுக்கவில்லையோ, அது வரை. தேவதைகளுக்கும் அவர் பற்றித் தெரியாது. தானாகிய ஆத்மா பற்றியோ, மற்ற படைப்பு பற்றியோ

எதுவும் தெரிந்து கொள்ள முடியாது.

பாபா சொல்கிறார், இந்த ஞானம் மறைந்து போகிறது. இவர்கள் இத்தனை கோவில்கள் முதலியவற்றைக் கட்டியுள்ளனர். இவை அனைத்தும் அழிந்துவிடப் போகின்றன. பக்தி மார்க்கத்தின் எந்த ஒரு பொருளும் மிஞ்சி இருக்கப் போவதில்லை. இப்போது பாபா சொல்கிறார், தந்தையாகிய என்னை மட்டும் நினைவு செய்யுங்கள், மற்ற அனைவரிடம் இருந்தும் மோகத்தை நீக்கி விடுங்கள். சந்நியாசிகளோ இது போல் சொல்ல முடியாது. அவர்களுடையது துறவற மார்க்கம். தூய்மையாக இருந்து தூய்மை இல்லாமலும், பிறகு தூய்மையில்லாம-ருந்து தூய்மை யாக நீங்கள் ஆக வேண்டும். சந்நியாசிகளுக்கும் டிராமாவில் பார்ட் உள்ளது. இவர்கள் இல்லை என்றாலோ பாரதம் மேலும் துக்கம் நிறைந்ததாக ஆகி விடும். முக்கியமான வி^யமே தூய்மை யினுடையது. தூய்மையின் சக்தி மூலம் பாபாவின் ஸ்ரீமத் படி நீங்கள் தூய்மையற்ற சிருஷ்டியைப் தூய்மையாக்குகிறீர்கள். ஆத்மாக்கள் நாம் பாபாவோடு கூடவே செல்லப் போகிறவர்கள். தூய்மை ஆகி-ஆகியே நாம் போய்ச் சேர்ந்து விடுவோம். இந்த யாத்திரை மிகவும் அற்புதமானது. ஹே இரவு நேரப் பயணியே, களைத்துப் போகக் கூடாது. சத்யுகம் பகல் எனச் சொல்லப்படுகின்றது. முதலில் நீங்கள் இனிய வீட்டுக்குச் சென்று, பிறகு பகலில் (சத்யுகம்) வருவீர்கள். நீங்கள் ஆன்மிக யாத்திரை செய்யும் பிராமணர்கள், எவ்வளவு புரிந்து கொள்ள வேண்டிய வி^யங்கள்! எவ்வளவு பாபாவை நினைவு செய்கிறீர்களோ, பதவியும் அவ்வளவு உயர்ந்ததாக அடைவீர்கள். வருமானம் அதிகம் உள்ளது. செய்யவில்லை என்றால் அழிந்து போவீர்கள். கொஞ்சமாவது முயற்சி செய்ய வேண்டும் இல்லையா? லௌகிக் தந்தையை அமரும் போதும் நடமாடும் போதும் நினைவு செய்கிறீர்கள் இல்லையா? பரலௌகிக் தந்தையை ஏன் மறந்து போகிறீர்கள்? வெட்கம் வரவில்லையா? லௌகிக் தந்தையை எப்போதாவது மறக்கிறீர்களா என்ன? பரலௌகிக் தந்தையிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது. அவரை மறந்து விட்டீர்கள் என்றால் பிறகு என்ன பதவி பெறுவீர்கள்? யுக்தியோடு சொல்லிக் கொண்டே உள்ளனர். அவ்வளவு தான், இதோ பாபா வந்தே விட்டார். நமக்கு இப்போது இந்த சரீரமும் கூட வேண்டாம். மிக இனிமையான ஞானம். ஞானத்தைக் கொடுப்பவரும் மிக இனிமையானவர். அரைக்கல்பமாக துக்கத்தில் நினைவு செய்தே வந்திருக்கிறீர்கள். பாபா, எங்களை அனைத்து துக்கங்களில் இருந்தும் விடுவியுங்கள். இப்போது உங்களை அனைத்து துக்கங்களில் இருந்தும் விடுவிக்கிறேன்-என்னுடைய வழிப்படி நடப்பீர்களானால். நான் உங்கள் தந்தை இல்லையா? பிறகு ஏன் சொல்கிறீர்கள், பாபா நாங்கள் மறந்து போகிறோம் என்று? நீங்கள் குழந்தைகள் இல்லையா? சாந்திதாம், சுகதாமத்திற்கு வருவீர்கள் தானே? தந்தையாகிய என்னை நினைவு செய்ய முடியாதா? நான் உங்களை இரட்டைக் கிரீடம் அணிந்தவர்களாக ஆக்குவேன். குழந்தைகள் சொல்கின்றனர்-ஆம் பாபா, நினைவு செய்வோம் என்று. பிறகு சொல்கிறீர்கள், மறந்து விட்டோம் என்று. அதிசயம் இல்லையா? இவ்வளவு சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது, நீங்கள் மறந்து போகிறீர்களே! நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) பாபாவின் ஸ்ரீமத் மற்றும் தூய்மை சக்தியினால் இந்த தூய்மையற்ற சிருஷ்டியை தூய்மையாக்கும் சேவை செய்ய வேண்டும். தனக்காகத் தன்னுடைய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்ய வேண்டும்.

2) பரலௌகீக தந்தை இனிமையிலும் இனிமையானவர் அவரிடம் இருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது, அவரை நிரந்தரமாக நினைவு செய்ய வேண்டும். யோகபலத்தின் மூலம் தங்களின் இராஜ்யத்தைப் பெற வேண்டும்.

வரதானம் : ஒவ்வொரு வார்த்தை (சொல்வன்மை) மூலம் சேமிப்பு கணக்கை அதிகரிக்கக் கூடிய ஆத்மீக உணர்வு மற்றும் சுப பாவனை நிரம்பியவர் ஆகுக.

வார்த்தைகளின் மூலம் உணர்வு மற்றும் உணர்வுகள் அனுபவம் ஆகிறது. ஒருவேளை ஒவ்வொரு வார்த்தைகளிலும் நல்ல மற்றும் உயர்ந்த உணர்வு, ஆத்மீக உணர்வு இருந்தால் அந்த வார்த்தைகளின் மூலம் சேமிப்பு கணக்கு சேமிப்பு அதிகரிக்கிறது. அல்லது வார்த்தைகளில் பொறாமை, வெறுப்பு, கிண்டல் என்ற உணர்வு ஏதாவதொரு சதவீகதத்தில் உள்ளடங்கி இருந்தால், வார்த்தைகளின் மூலம் நஷ்டத்தின் கணக்கு அதிகமாகும். சக்திசாலியான வார்த்தைகளின் பொருள் - அந்த வார்த்தைகளில் பிராப்தியின் உணர்வின் சாராம்சம் இருக்கும். ஒருவேளை வார்த்தைகளில் சாராம்சம் இல்லையென்றால் வார்த்தைகள் அனைத்தும் வீணான கணக்கில் வந்துவிடுகிறது.

சுலோகன்: ஒவ்வொரு காரணத்திற்கும் நிவாரணம் செய்து

சதா திருப்தியாக இருப்பது தான் திருப்திமணி ஆவதாகும்